**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. திரைப்பட இசையமைப்பாளர் திரு. ஏ.ஆர். ரஹ்மான், ஆஸ்கர் விருதுகள் பெற்றமைக்குப் பேரவைத் தலைவரின் பாராட்டுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் செய்தி. இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக ஓர் இந்தியர், அதுவும் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ஏ.ஆர். ரஹ்மான் அவர்கள் *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* திரைப்படத் துறையில் உலகத்திலேயே மிக உயரிய விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருதுகள் இரண்டினை, தான் இஸ்ச அமைத்த 'Slumdog Millionaire' என்ற படத்திற்காகப் பெற்றுள்ளார். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* ஒரு தமிழன், தமிழ் திரையுலகினையே உலக அரங்கில் தலை நிமிர வைத்து, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் உலகப் புகழ் பெற்ற இரு ஆஸ்கர் விருதுகளைப் பெற்றுத் தந்தமைக்குத் தமிழ்த் திரை உலகத்தினர் நலனுக்காக, வாழ்நாள் முழுவதும் அவர்கள் உயர்வையே தன் எண்ணமாகக் கொண்டு வாழ்ந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், பேரவையின் உறுப்பினர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் அவருக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதோடு, *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* அவர் மென்மேலும் பல்வேறு விருதுகளைப் பெற்று வரவேண்டுமென்று பேரவையின் சார்பில் வாழ்த்துகின்றேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)*

## 3. தகவல் கோரல்

### (அ) பாலாற்றின் குறுக்கே குப்பம் பகுதியில் ஆந்திர அரசு தடுப்பணை கட்டுவதைத் தடுக்கக் கோருதல்

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir. . .

2009 பிப்ரவரி 23]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இன்றையதினம் மூன்று issues எடுத்துக்கொள்கிறேன். ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே குப்பம் பகுதியில் உள்ள கணேசபுரத்தில் ரூ. 56 கோடியில் தடுப்பணை கட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து;

சென்னை, மதுரவாயல், பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரி மாணவர்கள் அடிப்படை வசதிகள் கேட்டு வகுப்புகளைப் புறக்கணித்து தொடர் போராட்டம் நடத்தி வருவது குறித்து;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் உடனடியாக மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டி கடந்த ஒரு வார காலமாகப் பொதுமக்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து ஆகிய இந்த 3 issues-ஐ எடுத்துக்கொள்கிறேன்.

முதலில் ஆந்திர அரசு, பாலாற்றின் குறுக்கே குப்பம் பகுதியில் உள்ள கணேசபுரத்தில் ரூ.56 கோடியில் தடுப்பணை கட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருவதால் ஏற்பட்ட நிலை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக திரு. ஜி.கே. மணி ஆகியோர் விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாகக் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை, திருவள்ளூர், காஞ்சிபுரம், குறிப்பாக சென்னையினுடைய ஒரு பகுதி என்று (குறுக்கீடு) 5 மாவட்டங்களுக்குத் தண்ணீரை வழங்கி, குடிநீருக்காகவும், விவசாயத்திற்காகவும் உயிர்த் தண்ணீரைத் தந்துகொண்டிருக்கிற ஆறு பாலாறு. (குறுக்கீடு)

[2009 பிப்ரவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. பரிசீலனை செய்து எடுப்போம், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அந்தப் பாலாற்றின் குறுக்கே இப்போது ஆந்திர அரசு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** குப்பம் பகுதியில், கணேசபுரத்தில் 56 கோடி ரூபாயில் மிக வேக வேகமாக அணையை அவர்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 5 ஆண்டுக் காலமாக போதிய மழை இல்லாத காரணத்தினாலே, பாலாற்றில் வெள்ளம் இல்லாமல் போய், பாலாற்றுப் படுகையை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் இப்போது தொய்வடைந்து தண்ணீர் வழங்க முடியாமல் பல நகராட்சிகள், பல பேரூராட்சிகள், பல கிராம ஊராட்சிகள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

*முற்பகல் 10–50*

குறிப்பாக, எங்களுடைய வேலூர் நகருக்குத் தண்ணீரை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட கருகம்பத்தூர் குடிநீர்த் திட்டத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக நாங்கள் மோட்டாரே போடவில்லை. காரணம், அங்கே தண்ணீரே கிடையாது. இப்படி வற்றிப்போய் இருக்கக்கூடிய இந்தச் சூழலில், கொஞ்சநஞ்சம் மழை பெய்தாலும் அதில் வரக்கூடிய தண்ணீரையும் தடுத்து நிறுத்திவிடக்கூடிய வகையில், ஆந்திர அரசு இப்பொழுது 56 கோடி ரூபாயை ஒதுக்கி, அங்கே அணையைக் கட்டத் தொடங்கிவிட்டது. 2–1/2 கி.மீ. தூரத்திற்குப் பெரிய அளவிலே கால்வாயை வெட்டி விவசாயத்திற்குத் தண்ணீரை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறாக ஆந்திர அரசு நமக்கு வேதனையை அளித்து, போர்க்கால அடிப்படையிலே அணையைக் கட்டுகின்ற காரணத்தாலே எங்களுடைய வேலூர் மாவட்டம் குடிநீருக்காகவும், விவசாயத்திற்காகவும் கிடைக்க வேண்டிய தண்ணீரே இல்லாமல் மிகவும் திண்டாட்டத்தில் விடப்படக்கூடிய சூழலில் உள்ளது. மேலும் ஆந்திர அரசு, கங்காதரநல்லூர் என்ற இடத்தில் பொன்னையாற்றின் குறுக்கேயும் இப்பொழுது அணையைக் கட்டிக்கொண்டிருக்கிறது. அவர்கள் அணை கட்டுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு நீங்கள் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறீர்கள். ஆகவே நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்

2009 பிப்ரவரி 23] [திரு. சி. ஞானசேகரன்]

அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், உச்ச நீதிமன்றத்திடமிருந்து அதன்மீது ஏதாவது தடையாணையைப் பெற்றிருக்கிறார்களா; ஆந்திர முதல்வரோடோ, சம்பந்தப்பட்ட துறை அமைச்சரோடோ பேச்சு வார்த்தை நடத்தியாவது, அணை கட்டுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, வேலூர் மாவட்ட மக்களின் வயிற்றில் பால் வார்ப்பார்களா என்று நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி அவர்களுக்குப் பதிலாக திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வேலூர் மாவட்டத்திலே ஓடுகின்ற பாலாறு, பாழாய்ப் போய், தோல் கழிவுநீரை விடக்கூடிய தோலாறாக இப்பொழுது மாறிக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் கர்நாடக அரசு இருபதுக்கும் மேற்பட்ட அணைகளைக் கட்டிவிட்டது. ஆந்திர அரசும் அணையைக் கட்டிவிட்டது. கடைசியாக உயிர்த் தண்ணீராக அங்கே பில்லூருக்கு வரக்கூடிய கொஞ்சநஞ்சம் தண்ணீரையும் தடுக்க, ஆந்திர அரசு கணேசபுரத்திலே அணை கட்டுவதை முதன்முதலில் நாட்டுக்குத் தெரிவித்தது, பாட்டாளி மக்கள் கட்சி. அதற்காகப் பல்வேறு போராட்டங்களை நாங்கள் நடத்தியிருக்கிறோம். இருந்தாலுங்கூட, எங்கள் மாவட்டத்தின் மண்ணின் மைந்தராக இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறையினைப் பொறுப்பேற்றிருக்கின்றார்கள். ஏறக்குறைய 4 மாவட்டங்கள் பாலைவனமாக மாறி, அந்த ஊர்களிலே வாழ்கின்ற மக்கள், குடித் தண்ணீருக்காக இடம் பெயரக்கூடிய அபாய நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தாலே, உச்ச நீதிமன்றத்திலே தொடுக்கப்பட்ட வழக்கு என்ன நிலையில் இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள் அங்கே அணை கட்டுவதைத் தடுப்பதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திருமதி லதா, நீங்கள் எழுதிக் கொடுக்காமல் எழுந்து நின்று பேச நினைத்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

[2009 பிப்ரவரி 23

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி லதா அவர்களுக்கும் சேர்த்து நானே சொல்லிவிடுகின்றேன். எங்களுடைய மாவட்டத்திலுள்ள பாலாற்றில் தண்ணீர் வருகின்றதோ இல்லையோ, ஒவ்வொரு முறையும் சபை கூடுகின்றபொழுதும் கவன ஈர்ப்புத் தீர்மானம் வராமல் இருப்பதில்லை. ஆனால், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன் அவர்களும், திரு. ராஜா அவர்களும், அதேபோல கருத்துகளைச் சொல்ல முற்பட்ட குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி லதா அவர்களும் ஒரேவிதமான கருத்தைத்தான் சொல்கின்றார்கள். அது எனக்கும் உடன்பாடான கருத்துதான். பாலாற்றின் குறுக்கே அணையைக் கட்ட ஆந்திர அரசு நடவடிக்கை எடுத்தவுடன், அது இரு மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற ஆறு என்ற காரணத்தாலே, ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிடவேண்டுமென்று கோரி, *10–2–2006* அன்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு civil suit தொடுக்கப்பட்டது. அது *7–1–2008* அன்று விசாரணைக்கு வந்தது. அதை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஆந்திர அரசு அணை கட்டுகின்ற விவரத்தைக் கேட்டு, இதுகுறித்து தீர்வு காணவேண்டுமென்று மத்திய அரசை அறிவுறுத்தியது. அதனடிப்படையில், மத்திய அரசு இரு மாநிலங்களின் அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, அணை கட்டுவதற்கான ஆதாரம் என்ன என்பதை நம்மிடத்தில் கேட்டு, அதைக் கட்டுகிறார்களா, இல்லையா என்பதற்கான ஆதாரத்தையும், விவரத்தையும் கேட்டார்கள்.

முற்பகல் *10–55*

அதன் பிறகு ஒன்றைச் சொன்னார்கள், இந்தத் தீர்ப்பு வருகின்ற வரையில் நீங்கள் எதையும் கட்டக்கூடாது என்று மத்திய அரசு ஆந்திர அரசைக் கேட்டுக்கொண்டது. ஆனாலும், அணை கட்டுகின்ற பணி வேகமாக நடைபெறாவிட்டாலும், சென்ற மாத இறுதியிலே நம்முடைய அதிகாரிகள் சென்று பார்த்தவகையில் அரசுக்குத் தந்திருக்கின்ற விவரம், ஆந்திர மாநிலம், குப்பம் வட்டம், கணேசபுரம்–குக்குந்திக்குச் செல்லும் சாலையிலிருந்து சுமார் *200* மீட்டர் தூரத்தில், பாலாற்றின் குறுக்கே அணை கட்டப்படவுள்ள இடத்திலிருந்து வட கிழக்கே சுமார் *4* கிலோ மீட்டர் தூரத்தில் கிட்டேகான்பெண்டா என்னுமிடத்தில், மலைக் குன்றுகளுக்கு இடையில் பாசனக் கால்வாய் அமைக்க மண் வெட்டும் பணி நடைபெற்று வருகிறது. சுமார் *2* கிலோ மீட்டர் தூரத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. ஆற்றில் அல்ல; அங்கிருந்து *4* கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் மலைக்

2009 பிப்ரவரி 23] [திரு. துரைமுருகன்]

குன்றுகளுக்கு இடையில். அங்கே நில ஆர்ஜிதம் நடைபெற்ற காரணத்தால் அங்கிருக்கின்ற மக்கள் அதுகுறித்து எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். எனவே, அந்தப் பணியும் நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, பாலாற்றிலே அணை கட்டுகின்ற வேலையோ, அதையொட்டி மேல் பகுதியிலே மலைக் குன்று பகுதியிலே ஒரு கால்வாய் வெட்டுவதற்காக ஆந்திர அரசு எடுத்த முயற்சியோ நடைபெறவில்லை என்று நம்முடைய அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கை தந்திருக்கிறார்கள். 3–3–2009 அன்று மீண்டும் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வருகிறது. அப்போது விசாரணைக்கு வரும், மற்ற விவரங்கள் அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் எடுத்துவைக்கப்படும். (குறுக்கீடுகள்)

## (ஆ) சென்னை, மதுரவாயல் பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரி மாணவர்கள் அடிப்படை வசதிகள் கோரிப் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கடைசியில் கேட்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேட்கிறேன் என்கிறேன் அல்லவா? உட்காருங்கள். சென்னை, மதுரவாயல் பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரி மாணவர்கள், அடிப்படை வசதிகள் கேட்டு வகுப்புகளைப் புறக்கணித்து, தொடர் போராட்டம் நடத்தி வருவது குறித்து, பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. ப. டில்லி பாபு, திருமதி ரா. லீமா றோஸ் ஆகியோர் விதி 55–இன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரியில் கடந்த சில நாட்களாக, தொடர்ந்து மாணவர்கள், தங்கள் கல்லூரியில் அடிப்படை வசதிகள் இல்லை; போதுமான பேராசிரியர்கள் இல்லை; அதனால் தங்களுடைய படிப்பு பாதிக்கப்படுகிறது என்கிற கோரிக்கையை முன்வைத்து வகுப்புகளைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதில் அரசு தலையிட்டு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து